# க.பொ.த(சா/த)

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள்

# வரலாறு

# (2016 – 2019)

# பகுதி I


தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

## 2016

01 வம்சத்தப்பகாசினி என்பது எந்த வரலாற்று நூலுக்கு எழுதப்பட்ட உரைநூல்(டீகாவ) ஆகும்

1 தீபவம்சம்   2 மகாவம்சத்தின் முதலாம் பாகம்   3 தூபவம்சம்   4 போதிவம்சம்

02 புராதன காலத்தின் இலக்கிய, சமயத் தகவல்கள், வம்சக் கதைகள் என்பன எழுதப்பட்டிருப்பது

1 ஓலைகளிலான ஏட்டுச்சுவடிகளில்   2 கற்பலகைகளில்

3 கற்குகை நீர்வடி விளிம்புகளில்   4 தங்க, செப்பேடுகளில்

03 தனது அனுபவத்திலிருந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைக் கொண்ட நூலொன்றை எழுதியவர்

1 பால்டியஸ்  2 ரிபைரோ   3 றொபட்நொக்ஸ்   4 குவேரோஸ் அடிகளார்

04 பௌர்ணமி தினங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டப்பணம் அறவிட்டமை பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறும் மூலாதாரம் மேல்வருவனவற்றுள் எது

1 மிகிநத்தலை துண்டுக்கல்வெட்டு   2 வெவல்கெட்டிய கல்வெட்டு

3 கற்புத்தகக் கல்வெட்டு   4 சொரபொரவேவாவின் தூண் கல்வெட்டு

05 பிரஜை ஒருவராக வரலாற்று அறிவை மிக வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டியது.

1 இலங்கையின் கடந்தகால சிறப்பைக் கற்பதற்காக

2 பழமையான தொழினட்ப அறிவை நவீனமயப்படுத்திப் பயன்படுத்துவதற்காக

3 கடந்த காலங்களில் செய்யப்பட்ட தவறுகளை மீண்டும் செய்யாதிருப்பதற்காக.

4 கடந்த காலத்தைக் கொண்டு நிகழ்காலத்தை விளங்கிக்கொண்டு எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்காக.

06 இலங்கையின் தேசிய மரபு ரீதியான தொல்பொருட்களை மேல்வருவனவற்றுள் எந்தக் காரணத்திற்காகப் பாதுகாக்க வேண்டும்.

1 எதிர்கால சந்ததியினருக்குக் காட்ட வேண்டுமென்பதால்.

2 இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டக் காரணமாக இருப்பதால்.

3 சுற்றலாத்துறையின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைவதனால்.

4 கடந்தகால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

07 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கற்சாதனங்கள் கிடைக்கப்பெற்றுள்ள பதிராஜவெல பிரதேசத்தின் இரணைமடுப் படிவுக்குரிய கற்காலச் சரளைக்கற்படிவு, கால அளவீட்டிற்கமைய

1 ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

2 எண்பதாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

3 முப்பத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

4 இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

08 இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்நந்த மனிதன் வாழக்கை முறை பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவும் பெரும்பாலன சான்றுகள் கிடைக்கப்பெற்ற இடமாகக் கருதப்படுவது

1 ரிட்டிகல 2 கந்தரோடை(கதுருகொட) 3 பாகியன்கல 4 கதிர்காமம்

09 இலங்கையின் இரும்பு பயன்பாடு தொடர்பான தெளிவான தொல்பொருளியற் சான்றுகள் முதன்முதலில் கிடைக்கப்பெற்றது

1 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலாகும் 2 முன் வரலாற்றுக் காலத்திலாகும்.

3 ஆரம்ப வரலாற்றுக்காலத்திலாகும். 4 வரலாற்றுக் காலத்திலாகும்.

10 வேட்டையாடுதலின் மூலம் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன், விவசாயத்தில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்த அடிப்படை சுற்றாடற் காரணி மேல்வருவனவற்றுள் எது

1 மண்ணின் வளமான தன்மை அதிகரித்தமை.

2 வேட்டையாடுதலுக்குப் பொருத்தமான விலங்குகுளின் தட்டுப்பாடு.

3 குளர்காலநிலை மாற்றமுற்று வெப்பக் காலநிலை ஆரம்பித்தமை.

4 மக்கள் தொகை அதிகரிப்பும் பரவலும்.

11 ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் குடியிருப்புக்களின் பரவல் தொடர்பானதொரு விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முக்கியமானதாய் அமையும் காரணி மேல்வருவனவற்றுள் எது

1 கிராமக் குளங்களின் விஸ்தரிப்பு 2 குகைகளின் அமைவு

3 செங்கபலி மண்ணின் பரவல் 4 சமதரைகளின் விஸ்தரிப்பு

12 பருமகர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தைப மையப்படுத்தும் செயன்முறையைத் தொடக்கிய அரசன்

1 பண்டுகாபயன் 2 தேவநம்பியதீசன் 3 துட்டகைமுனு 4 வசபன்

13 புராதன இலங்கையில் முன்னேற்றகரமான தருத்துவத் தொழினுட்பம் காணப்பட்டமைக்கான முக்கிய சான்றாக அமைவது

1 பழமையான வைத்திய நூல்கள் பயன்பாட்டிலுள்ளமை.

2 தொல்பொருள் ஆய்வுகளில் சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டமை.

3 மருத்துவர்களாகப் பிரபலமடைந்த அரசர்கள் தொடர்பாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

4 கடந்தகால வைத்தியசாலைக் கட்டடங்களின் இடிபாடுகள் கிடைக்கப்பெற்றமை.

14 பல இடங்களில் அணைக்கட்டுகளை அமைத்து நீண்ட தூரத்திற்கு கால்வாய் மூலமாக நீரைக் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட நதி மேல்வருவனவற்றுள் எது

1 மல்வத்துஓயா 2 கலாஓயா 3 யான்ஓயா 4 மகாவலிகங்கை

15 இலங்கையை மூன்று முறை ஆட்சி செய்வதற்காக வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ள அரசி மேல்வருவோருள் யார்?

1 லீலாவதி 2 கல்யாணவதி 3 சுகலா 4 சூலசீவலி

16 கீர்த்தி ஸ்ரீ சிநங்கமல்ல மன்னன் தனது பல்வேறு கல்வெட்டுக்களில் பயன்படுத்தியுள்ள அரச கோட்பாடு தொடர்பான எண்ணக்கரு

1 தேவ எண்ணக்கரு 2 போதிசத்துவ எண்ணக்கரு

3 பர்வதராஜ எண்ணக்கரு 4 சக்கரவர்த்தி எண்ணக்கரு

17 பழங்காலத்தில் கவு எனும் அளவீட்டு முறை பயன்படுத்தப்பட்டது.

1 காலத்தைப் அளப்பதற்கு 2 துவூரத்தை அளப்பதற்கு

3 நிறையை அளப்பதற்கு 4 பரப்பை அளப்பதற்கு

18 கல்வெட்டு மூலாதாரங்களில் தக்கபதி எனக் குறிப்பிடப்படுவது

1 நீர்வரியாகும் 2 தானிய வரியாகும் 3 மீள் வரியாகும் 4 துறைமுக வரியாகும்

19 மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.

- நகராக்கத் திட்ட வரைபடங்கள் கேத்திரகணிதப் பொறிமுறைத் தன்மையிலிருந்து மீண்டு சுதந்திரத் தன்மைக்கு மாற்றமுறல்.
- நகரங்கள் அளவில் மிகப் பெரிதானதாகக் காணப்பட்டமை.

மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய நகரங்களின் சோடி இவற்றுள் எது

1 அனுராதபுரமும், பொலநறுவையும் 2 அனுராதபுரமும் தம்பதெனியாவும்

3 தம்பதெனியாவும் யாப்பகூவாவும் 4 பொலநறுவையும் குருனாகலையும்

20 மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கருதுக.

A – ஐந்நூற்று ஐம்பது ஜாதகக் கதை சிங்களத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டமை.

B – கண்டிய பிரதேச ஆட்சியாளனான ஜோதிய என்பவன் கிளர்ச்சியை அடக்கியமை.

C – சந்திரபானு இலங்கை மீது படையெடுத்தமை.

D - இபன்பதூதா என்ற அராபியப் பிரயாணி இலங்கைக்கு வருகை தந்தமை.

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால உழுங்கில் கொண்டுள்ள சரியான விடை

1 ACBD 2 CADB 3 CDAB 4 DCAB

21 கண்டி இராசதானி தொடர்பான மேல்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.

1 நாட்டின் உயர் ஆட்சியதிகாரமும், நீதித்துறை அதிகாரமும் அரசனிடம் காணப்பட்டது.

2 மரபுகள் முன்னைய பழக்கவழக்கங்களுக்கமைய ஆட்சி நடவடிக்கைகள் இடம்பெறல்.

3 சமூகத் தொடர்புகளும் திருமணங்களும் சாதிமுறையினடிப்படையில் இடம்பெற்றன.

4 நாட்டின் அனைத்து பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமானவர்களாகக் கருதப்பட்டனர்.

22 போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவர் யார்?

1 சங்கிலியன் 2 பரராஜசேகரம் 3 புவிராஜபண்டாரம் 4 எதிர்மன்னசிங்கம்

- மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| அரசன் | இடம் | இராணுவ அதிகாரி |
|---|---|---|
| A - முதலாம் விமலதர்மசூரியன் | D - ரந்தெனிவலை | G - தியோகு த மேலோ |
| B - முதலாம் இராஜசிங்கன் | E - தந்துரே | H - கொன்ஸ்தாந்தினு த சா |
| C - இரண்டாம் இராஜசிங்கன் | F - முல்லேரியா | J - பேரோ லோபேஸ் த சூசா |

23 ரந்தெனிபோருடன் தொடர்புடைய கண்டிய அரசனும் போர்த்துக்கேய இராணுவ அதிகாரியும் குறிப்பிடப்பட்டுள்ள விடை எது

1 AG 2 BH 3 CH 4 CJ

24 முதலாம் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயருடன் போரிட்ட இடத்தையும் அதன்போது போர்த்துக்கேய இராணுவத்தை வழிநடத்திய இராணுவ அதிகாரியையும் குறிப்பிடும் விடை எது

1 DG 2 EH 3 EJ 4 FG

25 அரசனுக்கு மகன்மார் இல்லாத போது அரசியின் சகோதரனுக்கு அரசுரிமையை வழங்கும் மரபினைக் கடைப்பிடித்தோர் மேல்வரும் எப்பரம்பரையைச் சேர்ந்த ஆட்சியாளர்களாவர்

1 மௌரியர் 2 இலம்பகர்ணர் 3 காலிங்கர் 4 நாயக்கர்

26 ஒல்லாந்தர் கண்டிய அரசர்களுடனான செயற்பாடுகளின் போது பெரும்பாலும் மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர்த்துக் கொண்டமைக்கு பிரதான காரணம் மேல்வருவனவற்றுள் எது

1 கண்டிய அரசர்களைப் பகைத்துக்கொள்வது தமது வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தடையாக அமையலாம் என்பது

2 கண்டிய மன்னர்களின் போர்ப்பலத்துடன் ஒப்பிடுகையில் ஒல்லாந்தர்களின் இராணுவ பலம் பலவீனமானதாகக் காணப்பட்டமை

3 செலவுகளைக் குறைத்துக்கொள்ளல் ஒல்லாந்தர்களின் கொள்கையில் அடிப்படைப் பண்பாகக் காணப்பட்டமை.

4 கண்டிக்கு இராணுவத்தை அனுப்பும் போது பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டமை

- கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – சர்வஜன வாக்குரிமை    B – தேசிய அரசுக் கழகம்    C – பொதுசன வாக்கெடுப்பு

D – செனட்சபை    E – விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை

27 டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம், சோல்பரி அரசியல் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை ஒழுங்குமுறையில் உள்ளடக்கிய விடை யாது

1 AB    2 AD    3 BD    4 CE

28 1978 அரசியல் யாப்பில் அடங்கியுள்ள விடயங்களை உள்ளடக்கிய விடை யாது

1 BC    2 BD    3 CD    4 CE

29 ஆங்கிலேயர்கள் கண்டியைக் கைப்பற்றுவதற்காக தந்திரோபாயமாகச் செயற்பட்டதன் மூலம் பங்களிப்பு வழங்கியதாகக் கருதப்படுபவர்

1 மேஜர்ஹக்    2 எஹலபொல    3 ஜோன்டொயிலி    4 றொபட் பிறவுண்றிக்

30 இலங்கையில் தோற்றம் பெற்ற பழமையான அரசியல் கட்சி

1 லங்கா சமசமாஜக்கட்சி    2 ஐக்கிய தேசியக் கட்சி

3 இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி    4 ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி

31 இலங்கையில் அமைந்துள்ள சில விவசாயக் குடியேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – கல்லோயா    B – மின்னேரியா    C – கந்தளாய்

D மினிப்பே    E – கிரித்தலை

மேற்குறித்த விவசாயக் குடியேற்றங்களுள் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டவற்றைக் குறிப்பிடும் விடை எது

1 AE    2 BC    3 BD    4 CD

32 ஹென்றி ஸ்டீல்ஒல்கொட், அநகாரிக தர்மபாலா, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை ஆகியோரின் செயற்பாடுகளின் பொதுப்பண்பு

1 சமய, கல்வி மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கியமை.

2 இலங்கையின் கடந்தகாலச் சிறப்புக்களை உலகிற்கு எடுத்துக் காட்டியமை.

3 மதுவிலக்கு இயக்கத்துக்குத் தலைமை தாங்கியமை

4 அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கோரி போராட்டங்களை நடத்தியமை.

33 மத்திய காலத்தில் ஈராப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மேல்வருவனவற்றுள் எத்துறையில் லியனாடோடாவின்சி பிரசித்தி பெற்றார்.

1 மருத்து விஞ்ஞானம்    2 ஓவியக்கலை    3 நாடுகாண் பயணங்கள்    4 இலக்கியம்

34 பல்வேறு கண்டுபிடிப்புக்களைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – சாமுவேல் மோர்ஸ் B றொபட் புல்டன் C ஹம்பிறிடேவி

D – குக்லி மார்க்கோனி E ஜோன் மெக்கடம்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் கைத்தொழிற் புரட்சியின் போது தொடர்பாடல் துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புளைச் செய்தோரைக் காட்டும் விடை

1 AC 2 AD 3 BE 4 CE

35 கைத்தொழிற் புரட்சியின் காரணமாக முன்னேற்றமடைந்த சமூக விளைவைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1 பொருட்களையும், சேவைகளையும் இலாபகரமாகவும் விரைவாகவும் அதிக அளவிலும் வழங்க முடிந்தமை.

2 பல்தேசிய வணிகங்கள் முன்னேற்றமடையத் தொடங்கியமை.

3 நகரமயமாக்கலின் முன்னேற்றம் விரைவுபடுத்தப்பட்டமை.

4 நிதி, வங்கிச் சேவைகள் பரவலடையத் தொடங்கியமை.

கீழே A, B, C, D ஆகியவற்றினால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு **36** தொடக்கம் **38** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. போர் முரண்பாடுகள்
2. சூழல் மாசடைதல்

B – 1. நாசிசவாதம்
2. ஹிட்லர்

C – 1. மார்ஷல் திட்டம்
2. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு

D – 1. முதலாம் உலக மகாயுத்தம்
2. ஐக்கிய நாடுகள் சபை

36 முதலாவதன் விருத்தி இரண்டாவதின் அதிகரிப்புக்குக் காரணமானதெனக் காட்டும் விடயச்சோடி யாது

1 A 2 B 3 C 4 D

37 முதலாவதன் விருத்தியுடன் இரண்டாவது பலமடைவதனைக் காட்டும் விடயச்சோடி

1 A 2 B 3 C 4 D

38 முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையில் எதுவித தொடர்பையும் காட்டாத சோடி

1 A 2 B 3 C 4 D

39 இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் கொழும்பு, திருகோணமலை ஆகிய நகரங்களின் மீது விமானத் தாக்குதல் நடத்திய நாடு

1 ஐக்கிய அமெரிக்கா 2 ஜேர்மனி 3 ஜப்பான் 4 இத்தாலி

40 கூட்டுச்சேரா(அணிசேரா) நாடுகளின் அமைப்பு நிறுவப்படுதற்குத் தலைமையேற்றுச் செயற்பட்ட தெற்காசிய அரச தலைவர் மேல்வருவோருள் யார்?

1 மார்சல் டிட்டோ 2 ஜவஹர்லால்நேரு 3 அப்துல் கமால் நாசர் 4 லீ குவாய் யு

**2017**

41 கி.பி நான்காம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டமை, தகவல்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை, இந்நாட்டின் பழமையான வம்சக் கதையாக அமைந்துள்ளமை போன்ற விடயங்கள் எந்த மூலாதாரத்துடன் தொடர்புடையது

1 மகாவம்சம் 2 தீபவம்சம் 3 தாதாவம்சம் 4 போதிவம்சம்

42 இந்நாட்டின் பௌத்த சாசன வரலாற்றிற்கு முதலிடம் வழங்கி எழுதப்பட்டுள்ள நூலானது

1 ராஜாவலிய 2 ராஜரத்னாகரய 3 நிக்காய சங்கிரக 4 வினயட்டகத்தாவ

43 பெறுமதி வாய்ந்த வரலாற்று மூலாதாரமாகக் கருதப்படும் கல்வெட்டுக்கள் தொடர்பில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.

1 கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சம்பவங்களுக்கு சமகாலத்தவையாகும்.
2 வம்சக்கதைகளில் காணப்படும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு உதவுபவையாகும்.
3 தொடர்ச்சியான அரசியல் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தலாம்.
4 சிங்கள எழுத்துக்களின் பரிணாமத்தை அறிந்து கொள்ளப் பயன்படும்.

44 புளத்சிங்கள, குருவிட்ட போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள குகைகளில் முக்கியத்துவம் யாதெனில் அவை

1 அனுராதபுரம், பொலநறுவை காலப்பகுதிகளின் பாதுகாப்பு நிலையமாக விளங்கியமை.
2 புராதன பௌத்த துறவி மடமாகக் காணப்பட்டமை
3 கல்வெட்டுக்களில் எழுதுவதற்கு பிராமி எழுத்துக்களைப் பயன்படுத்தியமை.
4 வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் வாழ்க்கைத் தகவல்களுக்குரித்தான காரணிகள் கிடைக்கப் பெற்றமை.

45 பின்வரும் நபர்களில் இலங்கைக்கு வருகை தந்து தகவல்களைச் சேகரித்து, அறிக்கைகளைத் தயாரித்தோரைக் கொண்டுள்ள விடை

A – மெகஸ்தனிஸ் B - பாகியன் தேரர் C – தொலமி

D - இபன்பதூதா E – றொபட்நொக்ஸ் G - ஹியுங்சாங்

1 BDF 2 CDE 3 BDE 4 ABD

46 கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையின் அரச குடும்ப பெண்களின் ஆடையணிகலங்கள் மற்றும் அழகுக்கலை பற்றி விளங்கிக் கொள்வதற்குப் பயன்படுவன யாவை

1 சிகிரியா சுவர்களில் வரையப்பட்டுள்ள பெண்களின் உருவங்கள்
2 தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப்பெற்ற ஆபரணப் பதிவுகள்
3 பொலன்னறுவை திவங்க படிமனையில் வரையப்பட்டுள்ள படக்குறிப்புக்கள்
4 கண்டி தலதாமாளிகையிலுள்ள ஓவியங்கள்

47 இலங்கையின் முன்வரலாற்றுக் காலப்பகுதிக்குரிய முக்கிய சம்பவமாக அமைவது

1 மட்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கியமை.

2 படிகம் மற்றும் மஞ்சள் நிறக் கற்களைப் பயன்படுத்தி கல்லாயுதங்கள் தயாரிக்கப்பட்டமை.

3 தாவரங்களையும், விலங்குகளையும் தீயில் சுட்டு உண்டமை.

4 நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு இயற்கையான கற்குகைகளில் வாழ்ந்தமை.

48 இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டு வாசிகள் தகனத்திற்கு ஒட்சிசன் வாயு அவசியமென்பதை அறிந்திருத்தமைக்கான உதாரணமாக முன்வைக்கத்தக்கது

1 கித்துள்கலயிலுள்ள பெலிலேன எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட சுட்ப்பட்ட காட்டு ஈரப்பலா விதைகள்

2 சுடப்பட்டு வர்ணம் பூசப்பட்ட மட்பாத்திரங்கள்

3 உடரஞ்சாமடத்தில் கண்டெடுக்கப்பட்ட வீட்டு இடிபாடுகளிலுள்ள சுடப்பட்ட

4 தீவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ள களி மண்ணிணாலான ஓடம் போன்ற மயானங்கள்

49 இறந்த உடல்களை உக்கிப்போகும் வரை புதைத்து பின்னர் அவற்றைத் தோண்டியெடுத்து மண்டையோட்டை செந்நிறமான கற்களால் நிறம் பூசுதல் போன்ற சடங்குகள் பற்றிய காரணிகள் பின்வரும் எக்காலப் பகுதிக்குரியதாகும்.

1 முன்வரலாற்றுக்காலம்     2 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

3 ஆரம்ப வரலாற்றுக்காலம்     4 வரலாற்றுக் காலம்

50 இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியேற்றங்களின் பரம்பலானது நதிக்கரையோரங்களிற்கு வெளியே காணப்பட்டதாக நவீன தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். மேற்படி கருத்தை உறுதிப்படுத்துவதற்கான நதிக

1 கல்லோயா   2 கிரிந்திஓயா   3 மல்வத்துஓயா   4 யான்ஓயா

- பின்வரும் உருவின் மூலம் குளத்தொகுதியொன்று காட்டப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 51, 52ஆம் வினாக்களுக்கு விடை தருக.

51 இவ்வாறான குளத்தொகுதி நிர்மாணத்தின் நோக்கமாக அமைந்திருக்கக்கூடியது



1 நீரைப் பாதுகாத்தல்

2 வெள்ள நீரைக் கட்டுப்படுத்தல்

3 காலநிலையின் சமநிலையைப் பாதுகாத்தல்

4 மண்ணரிப்பைத் தடுத்தல்

52 இது போன்ற குளத்தொகுதி நிர்மாணத்தின் ஒரு நோக்கமாக அமைந்திருக்கக்கூடியது

1 ஈரவலயத்திலாகும்     2 உலர் வலயத்திலாகும்

3 மலைநாட்டு ஈரவலயத்திலாகும்     4 தாழ்நாட்டு இடைப்பட்ட ஈரவலயத்திலாகும்

53 இலங்கை வரலாற்றில் முதன் முதலில் ஆற்றுக்குக் குறுக்காக அணைக்கட்டிய ஆட்சியாளனாகக் கருதப்படுபவன்

1 வசபன் 2 மகாசேனன் 3 முதலாம் அக்கபோ 4 இளநாகன்

54 திட்டமிடல், தொழினுட்பம், அலங்காரம் போன்ற விடயங்களில் இலங்கையின் மிகச்சிறந்த நகரப் பூங்காவாகப் கருதப்படுவது

1 மஹாமேகவனப் பூங்கா 2 தீப பூங்கா 3 சிகிரியா நீர்பூங்கா 4 ரன்மசுப் பூங்கா

55 விகாரை ஆராமைகளுக்கு(துறவி மடங்களுக்கு) செய்யப்படும் பூசைகள் பற்றிய தகவல்களடங்கிய கல்வெட்டுக்களில் பல்வேறு குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன அவற்றில் அன்னம் சித்தரிக்கும் குறியீட்டின் மூலம் உணர்த்தப்படுவது

1 சௌபாக்கியம் 2 தூய்மை 3 பாதுகாப்பு 4 நிறைவு

56 பண்டைக் காலத்தில் வீதிகளின் நீளத்தைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவையானது

1 கவ்வ 2 வியத்த 3 கரீசை 4 அங்குலம்

57 பின்வரும் நிரல் I இல் இலங்கையில் காணப்பட்ட கிராமிய குடியிருப்புக்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளதோடு நிரல் II ஆனது அவற்நின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளை குறிக்கிடுகிறது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கசீகார கம | A - கடற்றொழில் |
| 2. கோபால கம | B - மட்பாண்டம் வனைதல் |
| 3. கேவட்ட கம | C - தச்சுக் கைத்தொழில் |
| | D - விவசாயம் |
| | E - விலங்கு வேளாண்மை |

நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்டதும்போது பெறப்படும் சரியான விடை

1 ACE 2 CBD 3 DEA 4 EBD

58 இலங்கை பல்லின, பன்பத, பல்கலாசார நாடாகக் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி

1 தீவாக அமைந்திருக்கின்றமை.

2 இயற்கை வளங்கள் நிறைந்த நாடாகக் காணப்படுகின்மை

3 வர்ப்பான காலநிலையைக் கொண்ட நாடாகக் காணப்படுகின்றமை.

4 இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்றமை

59 பின்வரும் அரசர்கள், அரசி ஆகியோருள் பொலன்னறுவை இராசதானிக்குரியவர்களை உள்ளடக்கிய தெரிவு யாது?

A வங்கநாசிகதிஸ்ஸ B – கல்யாணவதி C – வசபன்

D நிஸங்கமல்லன் E – மகாசேனன் F – சகாசமல்லன்

1 ACF 2 BEF 3 ABE 4 BDF

60 பண்டைய சமூகத்தில் குற்றவாளியொருவர் ஊரில் மறைந்திருக்கும் வேளையில் அவரைப் பிடித்துக்கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது

1 கமிகவுக்கு 2 ஊரிலுள்ள அனைவருக்கும் 3 தசக மக்களுக்கு 4 பருமகவுக்கு

61 கிழே A தொடக்கம் E வரை இலங்கையில் அதிகாரத்திற்கு வந்த மன்னர்கள் சிலர் அரசராவதற்கு முன்னர் பயன்படுத்திய பெயர்கள் காட்டப்பட்டுள்ளன.

A – சப்புமல் இளவரசன் B – முத்துசாமி இளவரசன் C – டிக்கிரி இளவரசன்

D – மஹாஅஸ்தானா இளவரசன் E – கண்ணுசாமி இளவரசன்

இவற்றை வாசித்து முதலாம் இராஜசிங்கன், ஆறாம் புவனேகபாகு, மற்றும் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் போன்ற மன்னர்கள் பயன்படுத்திய பெயரை ஒழுங்குமுறையில் காண்பிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

1 CAE 2 DAB 3 CAB 4 DCB

62 கம்பளை இராசதானிக் காலத்தில் அரசியல் துறையில் காணக்கூடிய சிறப்பியல்பு யாதெனில்

1 இந்து மற்றும் மஹாயான செல்வாக்கினால் சிலைமனைகளில் தேவாலயங்களை அமைத்தல்.

2 தூது இலக்கியங்களைப் படைக்க ஆரம்பித்தல்.

3 தாய்வழி அரசுரிமை முறை ஆரம்பமாதல்.

4 அரசுரிமை ஒரே அரச குடும்பத்தின் தந்தையிலிருந்து தனயன்மாருக்கு உரித்தாதல்

63 யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைதல் பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1 அரசுரிமையாளரிடையே உரிமைப் போராட்டங்கள் ஏற்பட்டமை.

2 யாழ்ப்பாண ஆட்சியாளருக்கு நிலையான படையொன்று காணப்படாமை.

3 இயற்கையரண்களாலான பாதுகாப்பின்மை

4 யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையான மக்கள் போர்த்துக்கேயருக்குச் சார்பாக இருத்தல்.

- பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களின் துணையுடன் 64, 65 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

  A – தந்துரேப் போரில் போர்த்துக்கேயர் தோல்வியுறல்

  B - குசுமாசனதேவி தோனகத்தரினா எனும் பெயரில் ஞானஸ்நானம் பெறல்

  C – நாயக்கர் வம்சத்திற்கு கண்டி இராசதானியின் அரசுரிமை வசமாதல்

  D - இந்நாட்டில் சீயம் நிக்காய ஆரம்பமாதல்

64 மேற்படி சம்பவங்களில் வரியான வரலாற்றொழுங்கைத் தருக.

1 ABDC 2 BCAD 3 ACBD 4 BACD

65 C எழுத்தினால் காண்பிக்கப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய மன்னர் யார்?

1 ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் 2 கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

3 ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 4 .ராஜாதி இராஜசிங்கன்

- பின்வரும் அட்டவணையில் A தொடக்கம் E வரையிலான தகவல்கள் மூலம் 66,67 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| செல்வாக்குச் செலுத்திய காரணி | தலைவன் | ஆளுநர் |
|---|---|---|
| A - அரசின் வரிக்கொள்கை | C - கெப்பிற்றிபொல திசாவை | E - டொரிங்டன் பிரபு |
| B - அரசன் இல்லாமை பற்றிய வருந்துதல் | D - கொங்காலேகொட பண்டா | F - சேர் ரொபர்ட் பிரவுன்ட்றிக் |

66 கி.பி 1818ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடை எது?

1 ACE 2 BCF 3 ADF 4 BDE

67 கி.பி 1848ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டும் விடை எது?

1 ADE 2 BDE 3 ACF 4 BCF

68 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியுடன் தொடர்பான கருத்துச்சோடிகள் சில பின்வருமாறு இவற்றில் பொருத்தமற்ற சோடி எது?

1 ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் - பௌத்த பிரம்மஞான சங்கம்

2 ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் அவர்கள் - பேலியகொட வித்யாலங்கார பிரிவேனா ஆரம்பிக்கப்படல்

3 ஆறுமுனநாவலர் அவர்கள் - உதயபானு பத்திரிகை ஆரம்பிக்கப்படல்

4 சித்திலெப்பை அவர்கள் - மருதானை சாஹிரா கல்லூரி ஆரம்பிக்கப்படல்

69 கீழே காட்டப்பட்டுள்ள இலங்கையில் பிரித்தானியராட்சியினால் ஏற்பட்ட சில மாற்றங்களில் கலாசார மாற்றங்கள் இரண்டைக் காட்டும் விடை எது?

A தொழிலாளர் வகுப்பு உருவாதல்

B மேலைத்தேய ஆடையணிகள், பழக்க வழக்கங்கள் இந்நாட்டின் சமூகத்துடன் கலத்தல்

C மேலைத்தேயக் கல்வி பரவதல்.

D தொழிற்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படல்

1 BC     2 CD     3 BE     4 CE

70 இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவராகப் பதவி வகித்தவர் யார்?

1 சேர்.டி.பீ.ஜயத்திலக்க     2 சேர்.பொன்.அருணாச்சலம்

3 எப்.ஆர.சேனாநாயக்கா     4 சேர்.பொ.இராமநாதன்

71 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கிணங்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்று தொடர்பில் தீர்மானமெடுக்கப் பின்பற்றக்கூடிய ஜனநாயக வழிமுறை எது?

1 பாராளுமன்றத்தில் விவாதம் நடாத்துதல்

2 உயர் நீதிமன்றத்தில் முன்வைத்து தீர்ப்பைப் பெறுதல்

3 பொதுசன அபிப்பிராயத் தேர்தல் நடாத்துதல்.

4 நாட்டிலுள்ள கல்விமான்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்.

- பின்வரும் A,B என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 72,73 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

A – டென்னிஸ் மைதான உறுதிமொழி     B – சரஜிவோ நிகழ்வு

72 பிரெஞ்சுப் புரட்சியுடன் தொடர்பானது

1 A,B உண்மையற்றது     2 A,B உண்மையானது

3 A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது

4 A உண்மையற்றது என்பதுடன B உண்மையானது

73 முதலாம் உலக மகா யுத்தம் தொடர்பானது

1 A,B உண்மையற்றது     2 A,B உண்மையானது

3 A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது

4 A உண்மையற்றது என்பதுடன B உண்மையானது

- பின்வரும் A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ; பதங்களைக் கருத்திற் கொண்டு 74 தொடக்கம் 76 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – 1. கடலோடி ஹென்றி
   2. நாடுகாண் பயணம்

B –1. இரண்டாம் உலக மகாயுத்தம்
   2. சர்வதேச சங்கம்

C – 1. கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றுதல்
   2. மறுமலர்ச்சி தொடங்குதல்

D –1. உலகம் பற்றிய பதிய கண்டுபிடிப்புக்கள்
   2. விஞ்ஞான முன்னேற்றம்

74 முதலாவதன் அனுசரணையின் காரணமாக இரண்டாவது வெற்றிபெற்றமை தொடர்பான கூற்று

1 A 2 B 3 C 4 D

75 முதலாவதிற்கும் இரண்டாவதிற்குமிடையே தொடர்பின்மையைக் காட்டும் கூற்று

1 A 2 B 3 C 4 D

76 முதலாவது இரண்டாவதின் வளர்ச்சிக்கு ஏதுவாயமைவதைக் காட்டும் கூற்று

1 A 2 B 3 C 4 D

- உலகின் முக்கிய புரட்சிகளுன் தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் 77, 78 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – சமாதானம், காணி மற்றும் உணவு  B – பிரதிநித்துவமின்றேல் வரியில்லை

C – பஸ்டீல் சிறைச்சாலை தாக்கப்படல்

77 ரஸ்யப்புரட்சியின் தாரக மந்திரமாவது

1 A 2 B 3 C 4 D

78 அமெரிக்க சுதந்திரப்போருடன் தொடர்பான தகவலானது

1 A 2 B 3 C 4 D

79 கீழே தரப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் நிறுவனம் யாது

- பாதுகாப்புச்சபையின் சிபாரிசுடன் பொதுச்செயலாளரை நியமித்தல்
- சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமித்தல்
- புதிய உறுப்பினர்களை நிறுவனத்திற்குச் சேர்த்தல்

1 பொதுச்சபை 2 நம்பிக்கைப் பொறுப்புச்சபை 3 சமூக பொருளாதார சபை 4 செயலகம்

80 அமெரிக்கா அல்லது ரஸ்ய முகாமைச் சாராது நடுநிலையான அமைப்பொன்றை நிறுவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட தெற்காசிய தலைவர் யார்?

1 ஜவகர்லால்நேரு  2 எஸ்.டபிள்யு.பண்டாரநாயக்கா

3 அப்துல்கமால் நாசர்  4 மார்சல் டிட்டோ

**2018**

81 மகாவம்சம் சிறப்புக்குரியதாய் அமைவது

1 அரசியல் மற்றும் மதத் தகவல்களைத் தொடர்ச்சியாகக் கொண்டிருப்பதனால்

2 சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்திருப்பதனால் ஆகும்.

3 மிகப் பழமை வாய்ந்த வம்சக் கதையாக அமைந்திருப்பதனால் ஆகும்.

4 அடங்கியுள்ள தகவல்கள் நம்பகத் தன்மையுடையதாயிருப்பதனாலாகும்.

82 தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சீன, உரோம, அராபிய மற்றும் இந்திய நாணங்கள் இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் வெளிப்படும் மிக முக்கியமான விடயம்

1 இலங்கையில் முன்னேற்றமடைந்த ஒரு பொருளாதார முறை காணப்பட்டமையாகும்.

2 இலங்கையில் நாணங்களின் புழுக்கம் பிரபல்யமாக காணப்பட்டமையாகும்.

3 இலங்கை அந்நிய நாடுகளுக்குமிடையில் முன்னேற்றகரமான வர்த்தகத் தொடர்புகள் காப்பட்டமையாகும்.

4 உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தத்திருக்கலாம் என்பதாகும்.

83 இலங்கையின் வரலாற்றைக் கற்கும்போது பின்வரும் எக்கால கட்டத்துடன் தொடர்புபட்ட விதத்தில் தூதுக்காவியம், புகழ்காவியம், போர்க்காவியம் ஆகிய மூலாதாரங்கள் முக்கியத்துவமுடையனவாய் விளங்குகின்றன

1 பொலன்னறுவைக்காலம் தொடக்கம் தம்பதெனியாக் காலம் வரை

2 தம்பதெனியாக்காலம் தொடக்கம் கம்பளைக்காலம் வரை

3 கம்பளைக்காலம் தொடக்கம் கோட்டைக்காலம் வரை

4 கோட்டைக்காலம் தொடக்கம் கண்டிக்காலம் வரை

84 கல்வெட்டுக்களில் சூரியன், சந்திரன் ஆகிய குறியீடுகள் எதனைச் சித்தரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1 செழிப்பு    2 உறுதிப்பாடு    3 மழை    4 அரச உடமை

85 நாம் தொல்பொருள்களை பாதுகாக்க வேண்டும் ஏனெனில் அவை

1 இலங்கையின் தினத்துவத்தை எடுத்துக் காட்டும் சான்றுகளாக இருப்பதனாலாகும்.

2 சுற்றுலாத்துறைக்கு முக்கியத்துவமுடையதாக இருப்பதனலாகும்.

3 பௌத்த, இந்து கட்டட நிர்மாணக் கலைகளாக இருப்பதனலாகும்.

4 கடந்த கால கலைத்திறன்களை வெளிக்காட்டும் ஆதாரங்களாக இருப்பதனலாகும்.

86 வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ள மிகப்பழமை வாய்ந்த இடமாகக் கருதப்படுவது

1 குருவிட்ட பட்டதொம்பலன 2 கித்துள்கலபெலிலென

3 பாகியன்கல 4 அத்தனகொட அலுலென

87 பின்வரும் நிரல் I இல் தரப்பட்டுள்ள தகவல்கள் நிரல் II இல் தரப்பட்டுள்ள தொழில்நுட்ப நிர்மாணங்களுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபடுகின்றன. நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. தூய படிகம் | A - குளம் |
| 2. வேகமான காற்றுச் சக்தி | B - நுண்கருவிகள் |
| 3. சிறிய குன்றுகள் | C - அணைக்கட்டு (அமுன) |
| 4. ஆற்றின் வளைவு | D - இரும்பைப் பிரித்தெடுத்தல் |

(1) A, B, C, D (2) B, D, A, C (3) C, B, A, D (4) D, A, B, C

88 இலங்கையின் வரண்ட வலயத்தில் நிதிக்கரைகளுக்கு அப்பால், சிறுகுள முறைமையினை அண்டியதாகக் குடியிருப்புப் பரம்பல் ஏற்பட்டதெனக் கருதப்படுவது

1 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில 2 முன்வரலாற்றுக் காலத்தில்

3 ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் 4 வரலாற்றுக் காலத்தில்

89 சிறுகுள தொகுதிக்குப் பொறுப்பாக இருந்தவர்

1 மபுறுமுகா 2 பருமக 3 கமிக 4 கஹபதி

90 ஒழுங்கமைப்புடன் கூடிய மத்தியமயமான நிர்வாகத்தைக் கொண்ட பு‘ரண வசதிகளையுடைய தலைநகரை அமைத்தவர்

1 விஜயன் 2 அனுராத 3 உபதிஸ்ஸ 4 பண்டுகாபயன்

91 புராதன கட்டடக்கலை நிர்மாணிப்புக்களில் கழிவுப்பொருள்கள் முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டமைக்கான சிறந்த உதாரணம்

1 சிகிரியா அரண்மனையாகும் 2 ஆலாகனா பிரவேனாவாகும்

3 மிகிந்தலை தானசாலையாகும் 4 மெதிரிகிரிய வட்டதாகேயாகும்

92 புராதன இலங்கையில் மூன்று போகங்கள் பயிர்ச்செய்கை இடம்பெற்றதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. மூன்றாவது போகப் பயிர்ச்செய்கை தீர்மானிக்கப்பட்டது

1 கிராமத்தலைவரின் தன்னிச்சையான முடிவின்படியாகும்.

2 கடந்த பொகத்தில் கிடைத் அறுவடையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

3 விவசாயிகளின் அக்கறையினலாகும்.

4 நீரைப் பெற்றுக்கொள்ளும் தன்மையினாலாகும்.

93 இலங்கையைக் குறிப்பதற்கு அராபியர் வழங்கிய பெயர்

1 செய்லோன் 2 தப்ரபேன் 3 செரண்டிப் 4 தம்பபன்னி

94 பொலன்னறுவை காலப்பகுதியில் கற்றூண்கள் (காவுத கணு) பயன்படுத்தப்பட்டது

1 பெருந்தெருக்களின் தூரத்தைக் காட்டுவதற்காகும்

2 அரசின் உடமையைக் காட்டுவதற்காகும்.

3 கால்வாய்களின் நீளத்தைக் காட்டுவதற்காகும்

4 சரணாலயங்களின் எல்லைகளைக் காட்டுவதற்காகும்.

95 கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு இடம்பெற்ற காலத்தில் வாழ்ந்த ஒருவருக்கு அறிந்துகொள்ள **முடியாத** நிகழ்வுகளை உள்ளடக்கிய விடை யாது?

A – இப்னு பதூதா என்ற அராபிய யாத்திரிகன் இலங்கைக்கு வருகை தந்தமை
B – ருவன்வெலி தூபம் அமைக்கப்பட்டமை
C – முதலாம் காசியப்பன் சிகிரியாவைத் தனது நிர்வாக மத்தியநிலையமாக தெரிவு செய்தமை
D – இளவரசன் சபுமால் சிறிது காலம் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தமை

(1) A, B (2) A, D (3) B, D (4) C, D

96 அதிகளவு பாரத்தைத் தாங்கக் கூடியவாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டடக்கலை நிர்மாணிப்புக்களில் நவீன கொங்கீரிட் தொழினுட்பத்திற்கு ஈடான முறை பின்பற்றப்பட்டமைக்கான ஆதாரம் விடைக்கப் பெறுவது

1 ருவன்வெலிசாய அத்திவாரத்தில் 2 மல்வத்துஓயாவுக்கு மேலான கற்பாலத்தில்

3 மாதுறுஓயாவின் கலிங்கல்லிலாகும் 4 சிகிரியா பெரும் குளக்கட்டிலாகும்

97 இலங்கையில் அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெண்ணின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்திருந்தது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்

1 முதலாம் விமலதர்மசூரிய மன்னன் தோனாகத்தரினாவை திருமணம் செய்துகொள்ளல்

2 முதலாம் விஜயபாகு மன்னன் இளவரசி திரிலோகந்தரியை திருமணம் செய்துகொள்ளல்

3 இளவரசி மித்த பாண்டிய இளவரசனைத் திருமணம் செய்துகொள்ளல்

4 இளவரசன் வாலிய அசோகமாலாவைத் திருமணம் செய்துகொள்ளல்

98 தளபதி செங்ஹோவினால் இந்நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட சீன இராணுவ ஆக்கிமைப்புப் பற்றிக் குறிப்பிடப்படும் ஆட்சிக்காலம் யாது?

1 தம்பதெனியா 2 யாப்பகூவா 3 கம்பளை 4 கோட்டை

99 ஐரோப்பியர்கள் இலங்கையின் எந்த வர்த்தகப் பொருளைப் பெற்றுக்கொள்வதற்காக கடுமையான போட்டியில் ஈடுபட்டனர்

1 கறுவா 2 இரத்தினக்கல் 3 பாக்கு 4 யானைத் தந்தம்

100 கீழே A தொடக்கம் F வரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சியாளர்களுள் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றிய ஆட்சியாளர்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

A – டொன் யுவான் தர்மபால B – எதிர்மன்ன சிங்கம்
C – சங்கிலியன் D – முதலாம் இராஜசிங்கன்
E – ஏழாம் புவனேகபாகு F – வரோதயன்

(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) E யும் F உம்

101 இலங்கையில் பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சீரதிருத்தங்களோடு தொடர்புடைய சில முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை இடம்பெற்ற வரலாற்றுத் தொடரொழுங்கை காட்டும் விடை எது?

A – பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை
B – சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம்
C – செனட் சபை
D – சர்வஜன வாக்குரிமை

(1) A, B, D, C (2) A, C, D, B (3) B, A, D, C (4) B, D, A, C

- பின்வரும் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு 102, 103 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A – புதிய வரிகளை விதித்தல்
B – சுதேச உத்தியோகத்தர்கள் மூலம் வரி வசூலித்தல்
C – உயர்குடிப் பிரதானிகளின் உத்தியோகபூர்வப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல்
D – விதிக்கப்பட்ட வரிகளை பணமாக செலுத்துமாறு கட்டளையிடல்
E – ஒல்லாந்தரின் நீதிமன்ற முறைமையை மீண்டும் தாபித்தல்

102 கி.பி. 1797 இல் ஆங்கில வர்த்தகக் கம்பனிக்கு எதிராகக் கரையோர மாகாணங்களில் ஏற்பட்ட கலகத்திற் செல்வாக்கு செலுத்திய காரணிகளைக் கொண்ட விடை யாது?
(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

103, மியூரன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்ளடக்கிய விடை எது?
(1) A யும் B யும் (2) A யும் E யும் (3) B யும் C யும் (4) B யும் E யும்

- கீழே A தொடக்கம் F வரையில் தரப்பட்டுள்ள கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு, 104 - 106 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – முஸ்லிம்நேசன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை
B – கொழும்பில் பௌத்த பிரம்ம ஞான (பரம விஞ்ஞார்த்த) சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை
C – கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை
D – உதயபானு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை
E – வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை
F – இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை

104 சேர் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களோடு தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் B யும் (2) B யும் D யும் (3) B யும் E யும் (4) C யும் E யும்

105 சித்திலெப்பை அவர்களுடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

106 ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் D யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) D யும் F உம்

107 முதலாளி, தொழிலாளர், மத்திய வகுப்பினர் ஆகிய மூன்று சமூக வர்க்கங்கள் பின்வருவனவற்றுள் எதன் விளைவாகத் தோற்றம் பெற்றன

1 தொழிற்புரட்சி 2 பிரான்சியப் புரட்சி 3 மறுமலர்ச்சி 4 அமெரிக்கப் போர்

108 1978 அரசியல் யாப்புக்கு அமைவாக பிரஜையொருவரின் அடிப்படை மனித உரிமைகளும் குடிமகன் ஒருவரின் பூரண சுதந்திரமும் மீறப்படும்போது குறிப்பிட்ட பிரஜை மனத்தாக்கல் செய்யக்கூடியது

1 மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2 உச்ச நீதிமன்றத்தில்
3 மேல் நீதிமன்றத்தில் 4 நீதவான் நீதிமன்றத்தில்

109 நேரடி ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பமாக கருதக்கூடியது

1 பாராளுமன்றத்தில் விவாதங்களை நடாத்துதல்

2 ஊடகங்கள் மற்றும் அபிப்பிராயங்களை விசாரித்தறிதல்

3 பொதுசன அபிப்பிராயத் தேர்தலை நடாத்ததல்

4 விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை நடைமுறைப்படுத்துதல்.

110 ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் பிரபல்யமானவர்களின் பெயர்கள் நிரல் I இலும் அவர்கள் பிரபல்யமடைந்த துறைகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. மைக்கல் ஆஞ்சலோ | A - நாடுகாண் பயணங்கள் |
| 2. பர்த்தலோமேயு டயஸ் | B - சித்திரக்கலை |
| 3. வில்லியம் ஹாவே | C - சமய சீர்திருத்தம் |
| | D - மருத்துவம் |

(1) A, C, D (2) B, A, D (3) B, C, D (4) C, B, D

111 ஜேர்மன் பேரரசு ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட முதல் ஆட்சியாளர்

1 ஓட்டோவொன் பிஸ்மார்க் 2 இரண்டாம் வில்லியம்

3 வொன்வோல்கே 4 அடோல் ஹிட்லர்

● கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுகளை / சோடிச் சொற்களை அவதானித்து, வினா 112 - 114 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. சர்வதேச சங்கம்
2. ஐக்கிய நாடுகள் சபை

B – 1. உலக சமாதானம்
2. பொருளாதாரத் தடைகள்

C – 1. இரண்டாம் உலக மகாயுத்தம்
2. இஸ்ரேல்

D – 1. சூழல் மாசடைதல்
2. தொழில்மயமாக்கம்

112 முதலாவதன் அதிகரிப்புக்கு இரண்டாவதன் அதிகரிப்பு காரணமாக அமைவதனை எடுத்துக் காட்டும் சோடி

1 A 2 B 3 C 4 C

113 முதலாவதன் தோல்வி இரண்டாவதன் ஆரம்பத்திற்கு காரணமாக அமைவதனை எடுத்துக்காட்டும் சோடிக் கூற்று

1 A 2 B 3 C 4 C

114 இரண்டாவது மதலாவதன் விளைவாகும் என்பதனை எடுத்துக் காட்டும் சோடிக்கூற்று

1 A 2 B 3 C 4 C

115 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் மார்சல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான நோக்கம்

1 அழிவுக்குள்ளான தோல்வியடைந்த ஐரோப்பிய நாடுகளைக் கட்டியெழுப்புதல்.

2 குடியேற்ற நாடுகளில் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

3 நட்பு நாடுகள் உலக யுத்தங்களில் ஈடுபட்டமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துதல்.

4 அணுவாயுத உற்பத்தியையும், உபயோகத்தையும் வரையறுத்தல்

116 பாசிசவாதத்திற்கு எதிரானவர்களை அழிப்பாற்காக கருஞ்சட்டை இராணுவம் என்னும் பெயரிலான ஆயுதப்படையை பயன்படத்திய சர்வாதிகார ஆட்சியாளர்

1 பெனிட்டோ முசோலினி　　2 அடோல்ஹிட்லர்

3 வூட்ரோவில்சன்　　4 வினஸ்டன் சேர்ச்சில்

- கிழே A,B என்பனவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 117,118ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A – பொஸ்டன் தேநீர் விருந்து　　B – பேர்ள் துறைமுகத்தின் மீதான தாக்குதல்

117 அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக

1 Aயம் Bயும் சரியானவை　　2 Aயம் Bயும் பிழையானவை

3 A சரியானது B பிழையானது　　4 A பிழையானது B சரியானது

118 இரண்டாவது உலக மகா யுத்தம் தொடர்பாக

1 Aயம் Bயும் சரியானவை　　2 Aயம் Bயும் பிழையானவை

3 A சரியானது B பிழையானது　　4 A பிழையானது B சரியானது

119 தமது அரசியல் அதிகார முகாம்களின் வெற்றிக்காக போர் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தந்திரோபாயமான முறையில் செயற்படும் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படும்

1 அணுவாயுத்களைவு　　2 எரிபொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல்

3 பொருளாதாரத் தடைகளை நீக்குதல்　　4 பனிப்போர்

120 கூட்டுச்சேரா நாடுகள் இயக்கத்தை தாபிப்பதில் முன்னோடியாகத் தொழிற்பட்ட யுகோஸ்லாவியாவின் ஜனாதிபதி

1 அப்துல்கமால்நாசர்　2 மார்சல் டிட்டோ　3 ஜவகர்லால்நேரு　4 லீ குவான் யு

**2019**

121 பின்வருவனவற்றுள் நாணய விஞ்ஞானம் பற்றிக் கற்கும் விடயம் எது?

1 உலோகக் கைத்தொழில் 2 கட்டட நிர்மாணக்கலை

3 மட்பாண்டக் கைத்தொழில் 4 புராதன நாணயங்கள்

122 அனுராதபுரக் காலத்திலிருந்து கோட்டைக்கால ஆரம்பம் வரையான வரலாற்றைக் கற்கும் போது அதற்கு உதவும் தேவிய இலக்கிய மூலாதாரங்கள் பெருமளவில் எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

1 சமயம் 2 பொருளாதாரம் 3 அரசியல் 4 சமூகம்

123 வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படும் மினிஹாகல்கந்த எந்த வசிப்பிட வகைக்கு உரியதாகும்.

1 தாழ்நில ஈரவலய குகைகள் 2 தாழ்நில உலர்வலய வெட்டவெளிகள்

3 கரையொர வெட்டவெளிகள் 4 தாழ்நில உலர்வலயு குகைகள்

124 பருமகமாருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த முக்கிய கடமை

1 அரசனுக்கு ஆலோசனை வழங்கல்

2 கிராம மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

3 நகரங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படுதல்.

4 குளத்தொகுதிக்குப் பொறுப்பாகச் செயற்படுதல்

- கீழே தரப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு 125ஆம்,126ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – ருவன்வெலிசாய கட்டப்பட்டமை

B இலம்பகர்ண அரச வம்ச முதல் ஆட்சியாளனானாமை

C – திரீபீடகம் நூல் வடிவமாக்கப்பட்டமை

D – முதலாவது முறையான யுத்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமை

E – முதன் முதலாக பாரிய அளவிலான குளங்கள் அமைக்கப்பட்டமை.

125 துட்டகைமுனு மன்னன் காலத்துக்கு உரி யசம்பவங்களைக் குறிப்பிடும் விடை எது

1 AC 2 AD 3 BC 4 BE

126 வசப மன்னன் னாலத்துக்கு உரிய சம்பவங்களைக் குறிப்பிடும் விடை எது?

1 AB 2 AD 3 BC 4 BE

127 அரச அதிகாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்ததன் முக்கிய விளைவாக அமைவது

1 அதிகாரம் பன்முகப்படுத்தப்படுதல் 2 அரசுகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படல்

3 பிரதேச ஆட்சியாளர் ஆதிக்கம் பெறுதல் 4 அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படுதல்

128 இலங்கையில் சில ஆட்சியாளர்கள் அண்டை நாடுகளுடன் திருமண உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதால் வெளிப்படுத்தப்படுவது

1 அண்டை நாடுகளின் ஆட்சியாளருக்கும் இலங்கை ஆட்சியாளருக்கும் இடையே நல்லுறவு நிலவியமை.

2 இலங்கை அரசர்களின் ஆதிக்கம் வெளிநாடுகளுக்கும் பரவியிருந்தமை.

3 உறவுமுறை தொடர்புகளினால் அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்தியமை.

4 வெளிநாட்டு இளவரசியைத் திருமணஞ்செய்தல் இந்நாட்டு அரசர்களின் சம்பிரதாயமாக இருந்தமை.

129 புராதன காலத்தில் பல்வேறு இனத்தவர்களில் பெரும்பாலானோர் இந்நாட்டுக்கு வருகை தந்தது

1 சுற்றுலாவுக்காகும் 2 வியாபாரத்துக்காகும்

3 க்விச் செயற்பாடுகளுக்காகும் 4 அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகும்

130 கொடுப்பனவு தொடர்பான சில கல்வெட்டுக்களில் நாய், காகம் என்பன குறியீடாகக் காட்டப்படுவதன் மூலம் மக்கள் சமூகத்துக்கு வழங்கப்பட்டசெய்தி

1 கொடுப்பனவின் ஒரு பகுதி நாய்களுக்கும் காகங்களுக்கும் உரித்தாகும்.

2 கொடுப்பனவுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினால் மறுபிறப்பில் அத்தகையை விலங்குகளாகப் பிறப்பு ஏற்படும்.

3 கொடுப்பனவை நாய்கள், காகங்கள்என்பவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

4 கொடுப்பனவுக்காக பிரதேசங்கள் நாய்கள், காகங்கள் என்பவற்றுக்கான சரணாலயங்களாகும்.

131 கலைத்துவம் மிக்கதும், நீர் முகாமைத்துவம், தொழினட்பம் என்பன அமைந்ததுமான மேன்மையான ஆக்கம் என்று மதிக்கப்படத்தக்கது

1 மடைக்கதவு 2 கற்பாலம் 3 யோதஎல 4 குட்டம்பொய்கை

132 புராதன காலத்தில் குடிப்பதற்கான நீரைப் பெறுவதற்கு கிணறுகளை அமைக்கும்போது பாரிய அளவிலான மட்பாண்டங்களை கிணற்றினுள் இறக்கி அதன் சுவர்களை மூடிவிடுவதால் எதிர்பார்க்கப்பட்டது

1 நீரின் அமிலச்சுவையை நீக்குதல் 2 நீர் ஆவியாதரைத் தவிர்த்தல்

3 நீரை மேலும் குளிரிமையாக வைத்திருத்தல் 4 நீரைச் சுத்தமாகப் பெற்றுக்கொள்ளல்

- கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 133ஆம் 134ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – பாரிய நீர்ப்பரப்பைக் கொண்டிருத்தல்.

B – குளத்து நீரை பிரதான கால்வாய்களுக்கு வெளியேற்றுதல்.

C – வலுவான நிர்மாணத்துக்காக இயற்கையான கருங்கல் அல்லது எச்சக்குன்றுகள் இரண்டைத் தெரிவுசெய்தல்

D – கற்பாறைகளைப் பயன்படுத்தி ஆற்றை அறித்து நீரை வேறு திசைக்குத் திருப்புதல்.

E- குளத்தில் சேரும் சேற்றை வெளியேற்றுதல்

133 குளக்கட்டு தொடர்பான தகவல்களைக் குறிப்பிடும் விடை

1 AC 2 AD 3 BC 4 CD

134 மடைக்கதவுகள் தொடர்பான தகவல்களைக் குறிப்பிடும் விடை

1 AE 2 BD 3 BE 4 CD

135 மறைந்திருக்கும் குற்றவாளியைதக் கண்டுபிடிப்பதற்கு முனைன்னயை ஆட்சியாளர்கள் கையாண்ட உத்தி

1 குற்றவாளியின் குடும்ப உறவினர்களைக் கைது செய்தல்

2 குற்றவாளியைக் கைது செய்யும் வரை அவன் வாழ்ந்த கிராம மக்களிடம் வரி அறவிடுதல்

3 குற்றவாளி தொடர்பான தகவல்களை வழங்குபவருக்கு பரிசு வழங்குதல்.

4 குற்றவாளியைப் பிடிப்பதற்கு முறையான உளவு சேவைகளைப் பயன்படுத்துதல்

136 முற்கால இலங்கையில் பெண்கள் விசேட மரியாதைக்கு உரியவர்களாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி

1 கணவன், மனைவியின் மரியாதையைப் பாதுகாத்து வாழ்ந்தமை.

2 குலத்தின் சம்பிரதாயங்களைப் பாதுகாத்து வாழ்ந்தமை.

3 தாய்மார்களாகப் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட்டமை.

4 சமையல் கலையில் வெளிக்காட்டிய திறமை

- பின்வரும் அட்டவணையில் A இலிருந்து F வரையுள்ள தகவல்களைக் கொண்டு 137ஆம் 138ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| அரசன் | ஆக்கிரமிப்பாளர் | வரலாற்று சம்பவம் |
|---|---|---|
| A நான்காம் புவனேகபாகு | C சந்திரபானு | E இபன்பாதாவின் வருகை |
| B இரண்டாம் பராக்கிரமபாகு | D செங்ஹோ | F பெலிகல தலதாமாளிகை அமைத்தல் |

137 தம்பதெனியா இராசதானிக் காலத்துடன் தொடர்பான தகவல்களைக் குறிப்பிடும் விடை எது?

1 ACE 2 ADE 3 BCF 4 BDF

138 கம்பளை இராசதானிக் காலத்துடன் தொடர்பான தகவல்களைக் குறிப்பிடும் விடை எது?

1 ACF 2 ADE 3 BCF 4 BDE

139 கண்டியை ஆட்சிசெய்த நாயக்கர் வம்ச ஆட்சியாளர்கள்பின்பற்றிய அரச மரபுரிமையானது அரசனின் பின்னர் அவரின்

1 மகாராணியின் சகோதரன் அரசுரிமை பெறுதல் 2 மூத்த சகோதரன் அரசுரிமை பெறுதல்

3 மகன் அரசுரிமை பெறுதல் 4 மகாராணி அரசுரிமை பெறுதல்

140 கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் வரி ஒழுங்கமைப்பில் மடிகேத்த எனக் குறிப்பிடப்படும் அமைப்புக்கு வழங்கப்பட்டிருந்த செயற்பாடு யாது

1 போக்குவரத்து 2 நெசவு 3 யானைகளைப் பிடித்தல் 4 கறுவா வெட்டல்

141 கண்டி மன்னர்களுக்கும் போர்த்துக்கேயர்களுக்கும் இடையில் போர் நடைபெற்ற இடங்கள் நிரல் Iஇலும் அவற்றை முன்னெடுத்துச் சென்ற போர்த்துக்கேள கப்பித்தான் ஜெனரல் பெயர்கள் நிரல் IIஇலும் தரப்பட்டுள்ளன. நிரல் Iஇற்கு ஏற்ப நிரல் IIஇனை ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான விடை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1 தந்துரே | A ஜெரனஜமோ த அசவேது |
| 2 பலன | B தியோயோ த மெலோ |
| 3 ரந்தனிவெல | C போரோ லொபெஸ்த சூசா |
| 4 கன்னொறுவா | D கொன்ஸ்தாந்தினு த சா |

1 BACD 2 BCDA 3 CADB 4 CDAB

142 கண்டி அரசர்களுடனான நடவடிக்கைகளின்போது ஒல்லாந்தர் பின்பற்றிய கொள்கைகளில் மிகத் தெளிவாகப் புலப்படும் பண்பு

1 இயலுமானவரை பொருளாதார இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்.

2 புரட்டஸ்தாந்து மதத்தை பிரசாரம் செய்தல்.

3 கண்டி இராச்சியத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றுதல்.

4 வெளிநாட்டுத் தொடர்புகளை தடைசெய்தல்

- கீழே ABCD எனக் கருத்துச்சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் காட்டப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களிடையேயான தொடர்பினைப் பரிசீலனை செய்து 143 தொடக்கம் 146 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A 1 பஸ்ரீலைத் தாக்குதல்
2 பிரான்சியப் புரட்சி

B 1 ஜோர்ஜ் வாஷிங்டன்
2 அமெரிக்கப் புரட்சி

C 1 சார் ஆட்சி
2 ரஸ்யப்புரட்சி

D 1 அணுகுண்டு வீசப்படுதல்
2 முதலாம் உலக மகா யுத்தம்

143 முதலாவது வீழ்ச்சியடைவதில் இரண்டாவதன் செல்வாக்கைக் காட்டும் சோடி

1 A 2 B 3 C 4 D

144 இரண்டாவதின் ஆரம்பத்திற்கு முதலாவது செயற்பாடு காரணமாகும் என்பதைக் குறிப்பது

1 A 2 B 3 C 4 D

145 இரண்டாவதின் வெள்ளிக்கு முதலாவது வழிகாட்டல் காரணமானது என்பதைக் குறிப்பது

1 A 2 B 3 C 4 D

146 முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே தொடர்பினைக் காட்டாதது

1 A 2 B 3 C 4 D

147 கைத்தொழில் புரட்சியின் போது மக்கடம் முறை பயன்படுத்தப்பட்டது

1 இரும்பு உருக்கு உற்பத்திக்கு 2 புகையிரதப் பாதைகளை அமைப்பதற்கு

3 பாலங்களை நிர்மாணிப்பதற்கு 4 பெருந்தெருக்களை அமைப்பதற்கு

148 கீழே தரப்பட்டுள்ள கைத்தொழில்மயமாதலின் விளைவுகளிடையே பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் விடை யாது?

A சூழல் மாசடைதல் ஆரம்பமாதல் B – பொருள் உற்பத்தி விரைவாகுதல்

C – நகரமயமாதல் பரவுதல் D சேரிப்புறங்கள், குடிசைகள் அதிகரித்தல்

1 A 2 B 3 C 4 D

149 பின்வரும் கூற்றுக்களுள் ஆளுநர் பிரெட்ரிக் நோர்த் தொடர்பானவற்றைக் குறிப்பிடும் விடைகள் எவை?

A அரச உத்தியோகத்தர்களான ஜோன்டொயிலியின் உதவியைப் பெற்றுக்கொண்டமை

B இளவரசன் முத்துசாமியை கண்டி மன்னனானப் பிரகடனப்படுத்தியமை

C தளபதி மெக்டோவலின் தலைமையில் கண்டி மீது படையெடுத்தமை

D மன்னனுக்கும் அவனது உறவினர்களுக்கும் கண்டி இராச்சிய சிம்மாசனத்துக்குரிய உரிமையை நீக்கியமை

1 A,B 2 B,C 3 B,D 4 C,D

150 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமய, கலாசார மறுமலர்ச்சி பற்றிய கருத்துச் சோடிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் பொருத்தமற்ற சோடி எது?

1 ஐம்பெரும் வாதங்கள் நடாத்துதல் - மீகெட்டுவத்த குணானந்ததேரர்

2 பெரிய புராணத்தை பிரசுரஞ்செய்தல் - ஆறுமுக நாவலர்

3 மாளிகாகந்த வித்தியோதய பிரவேனாவை ஆரம்பித்தல் - இரத்மலானை தர்மாலோக தேரர்

4 கொழும்பு ஸாஹிரா கல்லூரியை ஸ்தாபித்தல் - சித்திலெப்பை

151 கீழே யு தொடக்கம் னு வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பற்றிய சரியான தகவல்கள் அடங்கிய விடை எது?

A – கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றுதல்.

B – 1915இல் ஏற்பட்ட கலவரத்தை அடக்குவதற்கு இராணுவச் சட்டம் விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பௌத்தர்களுக்காக குரல் எழுப்புதல்

C – நாடகங்கள் மூலம் மதுபானத்தின் தீங்கு பற்றிச் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்

D - இலங்கை தேசிய சங்கத்தை தோற்றுவிக்க தலைமைத்துவம் வழங்கிச்செயற்படுதல்

1 AB 2 AC 3 BC 4 BD

152 யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பிழையான கூற்று யாது

1 விஜயகூழங்கை, யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன் எனக் கருதப்படுகின்றான்.

2 போர்த்துக்கேயரின் பகைவனான விதிய பண்டார பாதுகாப்புத் தேடி யாழ்ப்பாணத்துக்குத் தப்பியோடினான்.

3 யாழ்ப்பாண வைபவமாலை என்ற பெயருடைய நூல் யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியுள்ளது

4 யாழ்ப்பாணம் கறுவாச் செய்கைக்குப் பெயர்பெற்ற இடமாதலால் போர்த்துக்கேயர் கவனம் செலுத்தினர்

153 A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள பதவிப் பெயர்களிடையே சோல்பரி மற்றும் 1978 அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோது நீக்கப்பட்ட பதவிப் பெயர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடை

A – ஆளுநர் B – ஆளுநர் நாயகம்

C – பெயரளவு நிறைவேற்று ஜனாதிபதி D – நிறைவேற்று ஜனாதிபதி

1 AB 2 AC 3 BC 4 BD

154 சோல்பரி அரசியலமைப்பினால் இந்நாட்டுக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட சீர்திருத்தத்தை குறிப்பிடும் விடை எது?

1 அரசுக்கழகம் தாபிக்கப்படுதல் 2 சர்வசன வாக்குரிமை வழங்கப்படுதல்

3 பாராளுமன்ற முறை அறிமுகஞ்செய்யப்படல் 4 நிர்வாகக்குழு முறையை ஏற்படுத்தல்

155 இலங்கையின் மிகப்பழமையான அரசியல் கட்சி எது?

1 லங்கா சமசமாஜக்கட்சி 2 ஐக்கிய தேசியக் கட்சி

3 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 4 லங்கா கம்யுனிஸ்ட் கட்சி

156 கீழே தரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் எந்தப் பிரதமமந்திரியின் ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன

- சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குதல்
- துறைமுகம், பஸ்சேவை என்பன தேசியமயமாக்கப்படல்
- வித்தியோதயா, வித்தியலங்கரா பிரிவெனாக்கள் பல்கழலக்கழகங்களாக்கப்படுதல்

1 டி.எஸ்.சேனநாயக்கா 2 டட்லி சேனநாயக்கா

3 சேர்.ஜோன்.கொத்தலாவல 4 எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்கா

- கீழே யுஇடீஇஊஇனு எனத் தரப்பட்டுள்ளவை இலங்கையின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய சுற்றுக்கள் சிலவாகும். இத்தகவல்களைக் கொண்டு 157ஆம் 158ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – வரண்ட வலயத்தில் இதுவரை பயன்படுத்தப்படாத காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தல்

B – அதிகரிக்கும் மின்சக்திக்கான கேள்வியைப் பூர்த்திசெய்வதற்கு மின்சக்தி உற்பத்தியை விரைவுபடுத்தல்.

C – அரசுக்குச் சொந்தமான காணிகளை பாரிய செயற்றிட்டங்களுக்கு வழங்குதல்

D – பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையை மேலும் விரிவாக்கி தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டுதல்

157 மேலுள்ள கூற்றுக்களுக்கேற்ப விவசாயக் குடியேற்றங்களைத் தாபிக்கும் முக்கிய நோக்கம் கொண்ட கூற்று

1 A 2 B 3 C 4 D

158 பல்நோக்கு அபிவிருத்தி ஆலோசனை மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை உள்ளடக்கியது

1 A 2 B 3 C 4 D

159 ரெனிஸ் மைதான உறுதிமொழி, ஸ்டேட் ஜெனரல் என்பன கீழே தரப்பட்டுள்ள எந்த வரலாற்று சம்பவத்துடன் தொடர்புடையவை

1 அமெரிக்க சுதந்திரப்போர் 2 பிரான்சியப் புரட்சி 3 ரஸ்யப்புரட்சி 4 1ம் உலக யுத்தம்

160 சர்வதேச சமாதானம், பாதுகாப்பு என்பன போணப்படவதற்கு ஒரு நாட்டுக்கு பொருளாதாரத்தடை விதிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்குரிய நிறுவனம்

1 செயலகம் 2 பொதுச்சபை

3 சமூக பொருளாதார சபை 4 பாதுகாப்புச் சபை